இந்திய உச்ச நீதிமன்றம்

(2021) 7 எஸ்.சி.ஆர். 1138

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு. என்.வி. ரமணா

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யாகாந்த்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஹிமா கோஹ்லி

குற்றவியல் மேல்முறையீடு எண். 2438/2010

பிஜேந்தர் (எ) மந்தர் ..... மேல்முறையீட்டாளர்

– எதிர் –

ஹரியானா மாநில அரசு .... எதிர்மேல்முறையீட்டாளர்

இந்திய தண்டணைச் சட்டம்: 1860, பிரிவுகள் 392 மற்றும் 397– கொடிய ஆயுதங்களை பயன்படுத்தி கொள்ளை – மேல்முறையீடு செய்பவர் மற்றும் சக எதிரிகள் கைத்துப்பாக்கியுடன் ஆயுதம் ஏந்தி புகார்தாரர் மற்றும் அவரது உடன்பிறந்தவரின் மகனிடம் கொள்ளையடித்துள்ளார்கள் என்பது அரசுத்தரப்பு வழக்கு – இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 392 மற்றும் 397 –ன்படி தண்டணை விதிக்கப்பட்டது – வெளிப்படுத்துதல் அறிக்கையின் அடிப்படையில் கைப்பற்றுதல் நடைபெற்றுள்ளதால் உயர்நீதிமன்றம் தண்டணையை உறுதி செய்துள்ளது – இருப்பினும் இந்திய தண்டனை சட்ட பிரிவு 397–ன் கீழான தண்டணையை குறைத்துள்ளது.

நடைபெற்றது;– மேல் முறையீட்டில் குற்றம் சாட்டப்பட்டவரை வெளிப்படுத்துதல் அறிக்கையின் அடிப்படையில் பிரத்யேகமாக குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கலாம் – மற்றும் அதன் விளைவாக குற்றம் சாட்டப்பட்ட பொருளை மீட்டெடுப்பது – இருப்பினும் அத்தகைய குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை தக்க வைக்க மீட்பு நிறைவு பெற்றதாக இருக்க வேண்டும் – மற்றும் மறைக்கப்படக் கூடாது – சந்தேகத்திற்கிடமான கூறுகளுடன் வழக்கு தொடரும் முறை அல்லது மீட்பின் உள்ளடக்கம் தொடர்பான நம்பிக்கையை தூண்டத் தவறினால் குற்றம் சாட்டப்பட்ட குற்றம், குற்றம் சாட்டப்பட்டவருக்கு சந்தேகத்தின் பலனை நீதிமன்றம் வழங்க வேண்டும்.

சங்கதிகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் குற்றத்தை உறுதி செய்ய அரசுத்தரப்பு பரிதாபமாக தவறிவிட்டது – கீழமை

நீதிமன்றங்கள் பொருத்தமற்ற பரிசீலனைகளால் கூட்டுக்கொள்ளை சம்பவம் நடந்துள்ளதாக முடிவு செய்துள்ளன.

குற்றஞ்சாட்டப்பட்ட பொருட்களை மேல்முறையீட்டாளர் எவ்வாறு வைத்திருந்தார் என்பது குறித்து மேல்முறையீட்டாளர் விளக்க வேண்டும் என்று மெய்ப்பிக்கும் சுமையை கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் மீது சுமத்தியுள்ளது. முதன்மையாக மீட்டெடுப்பின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் தவறான நடத்தைக்கான அதன் தொடர்பை ஆராயாமல் மேல்முறையீட்டாளருக்கு எதிராக அனுமானம் எடுக்கப்பட்டுள்ளது – மேல்முறையீட்டாளரின் குற்றத்தை சித்தரிப்பதற்கான ஆதார சுமையை அரசுத்தரப்பு நிரூபணம் செய்ய தவறியபோதிலும் – பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள் மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்யவில்லை. எனவே கீழ் நீதிமன்றங்கள் பிறப்பித்த உத்தரவுகள் ரத்து செய்யப்படுகின்றன.

இந்நீதிமன்றம் மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கிறது.

நடைபெற்றது:– 1.1. குற்றம் சாட்டப்பட்டவரின் வெளிப்படுத்துதல் அறிக்கை மற்றும் அதன் விளைவாக மீட்டெடுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நீதிமன்றம் பிரத்யேகமாக குற்றவாளியாக அறிவிக்க முடியும். இருப்பினும் குற்றத்தை நிலைநிறுத்துவதற்காக அந்த கைப்பற்றுதலானது மறுக்க முடியாததாகவும், சந்தேகத்தின் கூறுகளால்

மறைக்கப்படாமலும் இருக்க வேண்டும். (பாரா 16) (1146–B–C)

1.2. குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்கு அதன் தொடர்புகள் தொடர்பாக மீட்கும் விதம் அல்லது உள்ளடக்கங்களில் நம்பிக்கையை ஏற்படுத்த அரசுத்தரப்பு தவறினால் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு சந்தேகத்தின் பலனை நீடிக்க வேண்டும். "பத்து குற்றவாளிகள் தப்பிப்பது நல்லது. அதே நேரத்தில் ஒரு நிரபராதி பாதிக்கப்படுவது நல்லதல்ல" என்பதே குற்றவியல் சட்டவிதியின் அடிப்படை கொள்கை. குற்றம் சாட்டப்பட்டவருக்கு பலன் அளிக்கும் கோட்பாட்டிற்கு வலுவான ஆதாரம் இருந்தபோதிலும் ஒரு குற்றவாளியை விடுவித்தாலும் ஒரு நிரபராதியை தண்டிப்பது நீதி வழங்குவதில் சிதைவை ஏற்படுத்துகிறது என்ற அடிப்படை கோட்பாடாக உள்ளது." (பாரா 17) (1146– E–G).

2. கொடிய குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் குற்றத்தை நிரூபிக்க பயம் அல்லது பிற தவிர்க்க இயலாத காரணங்களால் உண்மையை பேசத் தயங்குவது மட்டுமே ஒருவரை குற்றவாளியாக்குவது புத்திசாலித்தனமாகவோ அல்லது விவேகமாகவோ இருக்காது. சந்தேகத்திற்கிடமின்றி குற்றம் செய்யவில்லை என்பதை நிரூபிக்க வேண்டிய சுமை குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது இல்லை. அரசுத்தரப்பு சாட்சிகள் அரசுத்தரப்புக்கு எதிராக வழுவிச் செல்லும் நிலையில் அரசுத்தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ள வழக்குகளில் முக்கிய சாட்சிகளின் சாட்சியத்தை குற்றவியல் நடைமுறை சட்ட பிரிவு 164–ன் கீழ் பதிவு செய்ய வேண்டும் அல்லது தொடர்புடைய மற்ற சாட்சியங்களை சேகரிக்க வேண்டும். அந்த மாதிரியான வழக்குகள்

முழுமையாக வாய்மொழி சாட்சியத்தை சார்ந்திருக்க இயலாது. (பாரா 18) (1147–A–B)

3. மேல்முறையீட்டாளரின் மீதான குற்றத்தை நிரூபணம் செய்ய அரசுத்தரப்பு பரிதாபமாக தோல்வியடைந்துள்ளது மற்றும் கீழமை நீதிமன்றங்கள் அறியாமலேயே கொள்ளைச் சம்பவங்களின் அதிகரிப்பு போன்ற பொருத்தமற்ற கருத்துக்களால் திசை திருப்பப்பட்டுள்ளன. விசாரணை நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் மேல்முறையீட்டாளர்கள் மீது சுமத்தப்பட்ட சுமையை விரைவாக மாற்றியமைத்து குற்றம் சாட்டப்பட்ட பொருட்களை அவர் எப்படி வைத்திருந்தார் என்பதை தெரிவுபடுத்த முதன்மையான மீட்டெடுப்பின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தவறான நடத்தையுடன் அதன் தொடர்பை ஆராயவில்லை. உள்ளூர் சாட்சிகள் முன்னிலையில் மேல்முறையீட்டாளரின் வீட்டை சோதனையிடுவதற்கு காவல்துறை மேற்கொண்ட கணிசமான முயற்சியை காவல் உதவி ஆய்வாளரின் (அ.சா.14) சாட்சியம் வெளிப்படுத்தவில்லை என்பதை உயர்நீதிமன்றமும், விசாரணை நீதிமன்றமும் கருத்தில்கொள்ள தவறிவிட்டன. மீட்புக்கான ஒரே சுயாதீன சாட்சி அ.சா–8 தான், அவர் புகார்தாரரின் தோழராக இருந்தார். சொத்தினை மீட்கும்பொழுது இருந்த ஒரே தனிநபர் சாட்சி அ.சா.8 புகார்தாரரின் (அ.சா.4) நண்பர் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வங்கி கணக்கு புத்தகமோ அல்லது சிகப்புத்துணியோ மேல்முறையீட்டாளரின் வெளிப்படுத்துதல் அறிக்கையின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டதாக புகார்தாரரும் (அ.சா.4), அ.சா.8 ம் சாட்சியத்தில் கூறவில்லை. மீட்கப்பட்ட பொருட்களான பணம், கம்லா என்று சித்திர வேலை செய்யப்பட்ட சிகப்புத்துணி போன்றவைகள்

சந்தைகளில் எளிதில் கிடைக்கக்கூடிய பொருட்கள் என்று அ.சா.14 ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. புகார்தாரரிடம் கொள்ளையடித்த பணத்துடன் சிவப்பு துணி மற்றும் பாஸ்புக் இரண்டையும் மேல்முறையீட்டாளர் காலம் முழுவதும் வைத்திருந்தது நம்பத்தகாதது. மேலும் மேல்முறையீட்டாளரின் அக்கிரம செயல்களை நோக்கி தொலைவில்கூட வேறு எந்த சாட்சியமும், ஆதாரமும் இல்லை. (பாரா 19) (1147–C–H: 1148–A–C).

4. மேல்முறையீட்டாளர் மீதான குற்றத்தை அரசுத்தரப்பில் மெய்ப்பிக்கும் சுமையில் இருந்து தவறியுள்ள நிலையிலும் விசாரணை நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் தவறான அனுமானம் செய்துள்ளது. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பார்வையில் கூறப்படும் அச்சுறுத்தலைப் பொறுத்த வரையில் அத்தகைய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில் அத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு நம்பகத் தன்மையை வழங்குவது கடினமாக உள்ளது. இருப்பினும் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் குறித்து நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின்பொழுது புகார்தாரர் அளித்த வாக்குமூலத்தின் மீது நம்பிக்கை வைக்க அரசுத்தரப்பு முயற்சித்துள்ளது. மேற்கூறிய பிரமாணப் பத்திரத்தில் மேல்முறையீட்டாளரின் பெயரைக் குறிப்பிடவில்லை. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பார்வையில் கூறப்படும் அச்சுறுத்தலை பொறுத்தவரை அத்தகைய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்கு எந்த ஆதாரமும் இல்லாத நிலையில் அத்தகைய குற்றச்சாட்டுக்களில் நம்பகத்தன்மையை வழங்குவது கடினமாக உள்ளது. அடையாள அணிவகுப்பின்பொழுது

புகார்தாரர் அளித்த வாக்குமூலத்தின் மீது நம்பிக்கை வைக்க அரசுத்தரப்பு முயற்சித்துள்ளது. சக எதிரியால் தாக்கல் செய்யப்பட்ட வாக்குமூலத்தில் மேல்முறையீட்டாளரின் பெயர் காணப்படவில்லை. (பாரா 20) (1148–C–E).

5. பதிவில் உள்ள சான்றுகள் மேலமுறையீட்டாளரின் குற்றத்தை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கவில்லை மற்றும் கீழ் நீதிமன்றங்கள் மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நியாயப்படுத்த நியாயமான காரணமின்றி பதிவு செய்ய வந்துள்ளன. அதனால் விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகள் இரத்து செய்யப்பட்டு மேல்முறையீட்டாளர் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்யப்படுகிறார்.

விஜய் தாகூர் –எதிராக– இமாச்சல பிரதேச மாநில அரசு (2014) 14 SCC 609:

துளசிராம் கானு –எதிராக– மாநில அரசு AIR 1954 SC 1:

பஞ்சா –எதிராக– ஹரியானா மாநில அரசு (2011) 10 SC 165: (2011)12 SCR 1173:

இராஜஸ்தான் மாநில அரசு –எதிராக– தளவர் மற்றும் ஒருவர் (2011) 11 SC 666, (2011) 6 SCR 1050:

பரமாபரசுராம் குதாச்சர் –எதிராக– கர்நாடக மாநில அரசு (2014) 14 SCC 431 – குறிப்பிடப்படுகிறது.

<u>வழக்குச்சட்ட குறிப்புகள்</u>

(2014) 14 SCC 609	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 16
AIR 1954 SC 1	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 16

(2011) 12 SCR 1173	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 16
(2011) 6 SCR 1050	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 16
(2014) 14 SCC 431	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 16

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண்: 2438/2010.

குற்றவியல் மேல்முறையீடு எண்: 851/SB/2002-ல் சண்டிகாரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் 07.09.2009-ம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கு எதிராக மேல்முறையீட்டாளரால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர்கள் திரு. சுரேந்தர்சிங், திரு. முகுல்குமார்

எதிர்மனுதாரர் வழக்குரைஞர்கள் திருவாளர்கள். அல்கா அகர்வால், கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர், முனைவர். மோனிகா உசேன்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் சூர்யாகாந்த் அவர்களால் பகரப்பட்டது.

1. இந்த மேல்முறையீடானது மேல்முறையீட்டாளரான பிஜேந்தர் (எ) மந்தர் என்பவருக்கு இ.த.ச. பிரிவுகள் 392 மற்றும் 397-ன் கீழ் சோனிபட் கூடுதல் அமர்வு நீதிபதி 20.03.2002-ம் தேதியன்று வழங்கப்பட்ட

தண்டணையை உறுதி செய்து சண்டிகாரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் 07.09.2009–ம் தேதியன்று வழங்கிய தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராக எழுந்துள்ளது. இ.த.ச. பிரிவு 392–ன் கீழ் வழங்கப்பட்ட ஐந்து வருடங்கள் கடுங்காவல் தண்டணை மற்றும் ரூ.5,000/– அபராதத்தை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. எனினும் இ.த.ச. பிரிவு 397–ன் கீழ் வழங்கப்பட்ட பத்து வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டணையை ஏழு ஆண்டுகளாக குறைத்தும், ரூ.10,000/– அபராதமும் விதித்துள்ளது. இரண்டு தண்டணைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சங்கதிகள்:

2. சுருக்கமாக சொன்னால் 1999–ம் ஆண்டு ஏப்ரல் 14–ம் தேதி மதியம் 03.00 மணியளவில் பால் கிஷன் (புகார்தாரர்) டெல்லிக்கு செல்வதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் அவரது உடன் பிறந்தாரின் மகன் சஞ்சய் என்பவருடன் ஒரு மனையிடத்தை வாங்குவதற்காக ரூ.46,000/– பணத்தை எடுத்துக்கொண்டு செல்லும்போது ஜீத்தேரி சாலையிலுள்ள விரேந்தர் பன்சால் என்பவரின் பண்ணை வீட்டின் அருகில் புகார்தாரர் வந்தபோது வாகனம் ஒன்று அவரை வழிமறித்துள்ளது. மேல்முறையீட்டாளர் மற்றும் மஞ்சித் (உடன் குற்றம் சாட்டப்பட்டவர்) வாகனத்தைவிட்டு வெளிவந்தவுடன் நாட்டுத் துப்பாக்கியுடன் ஆயுதம் ஏந்தியபடி புகார்தாரரிடம் உள்ள பணத்தை ஒப்படைக்குமாறு கூறியுள்ளார்கள். புகார்தாரர் இருசக்கர வாகனத்தின் சாவியை மட்டும் கொடுத்துள்ளார். இருசக்கர வாகனத்தில் முன்பக்கம் இருந்த பணம் இருந்த பையை வெளியில் எடுத்துக்கொண்டு குற்றஞ்சாட்டப்பவர்கள்

அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்கள். அதன் பிறகு புகார்தாரர் தனது உடன்பிறந்தவரின் மகனையும், இருசக்கர வாகனத்தையும் சம்பவ இடத்தில் விட்டுவிட்டு நடந்தே அருகில் உள்ள காவல் நிலையம் நோக்கி விரைந்துள்ளார். அதிர்ஷ்டவசமாக புகார்தாரர் காவல் நிலையத்திற்கு செல்லும் வழியில் காவல் உதவி சார்பு ஆய்வாளர் திரு. ராஜிந்தர்குமார் (அ.சா.14) என்பவரை சந்தித்து அவரிடம் சம்பவத்தை தெரிவித்துள்ளார். அதன் தொடர்ச்சியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. காவல்துறைக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் உட்பட நான்கு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீது இந்திய தண்டணைச் சட்டம் பிரிவுகள் 392, 397 மற்றும் 120 (b) மற்றும் ஆயுதச் சட்டப் பிரிவு 25 ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டது. ஐந்தாவது சக எதிரி (வினோத்) கைது செய்யப்படவில்லை. அந்த எதிரி குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 82–ன் கீழ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டாலும் மேல்முறையீட்டாளர் உட்பட மற்ற குற்றவாளிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்துள்ளனர். இறுதியில் விசாரணையில் அரசுத்தரப்பில் 14 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் சமர்ப்பிக்கப்படவில்லை. புகார்தாரர் டெல்லியில் ஒரு வீட்டு மனை வாங்க பணத்துடன் செல்கிறார் என்பதை அறிந்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் வினோத் என்பவருடன் சேர்ந்து கொள்ளையடிக்க சதித்திட்டம் தீட்டி உள்ளார்கள் என்று அரசுத்தரப்பு விசாரணை நீதிமன்றத்தில் வழக்கின் விவரத்தை முன் வைத்துள்ளது.

உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களான முகேஷ் மற்றும் சுபாஷ் ஆகியோர் தகவல் அளித்த நிலையில் மேல்முறையீட்டாளரும், மன்ஜித் மற்றும் வினோத் ஆகியோரால் கொள்ளைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சக எதிரிகளான முகேஷ் மற்றும் சுபாஷ் ஆகியோர் தகவல் அளித்த நிலையில் மேல்முறையீட்டளார் மஞ்சித் மற்றும் வினோத் ஆகியோர் உண்மையில் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

4. அரசுத்தரப்பு வழக்கானது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கொடுத்த வெளிப்படுத்துதல் வாக்குமூலங்கள் மற்றும் அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முன் விசாரணையில் கைப்பற்றப்பட்டவைகள் ஆகியவற்றை அதிகளவில் சார்ந்து அமைந்துள்ளன. அரசுத்தரப்பு முன் வைத்த வழக்கின் நிகழ்வுகளை மேல்முறையீட்டாளர் தனது வெளிப்படுத்துதலில் (Ex.P.D) உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் மேல்முறையீட்டாளருக்கு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் அவரது பங்குத் தொகையாக ரூ.10,000/– கிடைத்ததாகவும், அந்தப் பணத்தில் ஏற்கனவே ரூ.5,000/–த்தை செலவு செய்துவிட்டதாகவும் கூறியுள்ளார். மேல்முறையீட்டாளர் காவல் துறையினரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு கண்டுபிடிக்கப்பட்ட சிகப்புத் துணி (அ.சா.ஆ.1) யுடன் ஒரு வங்கிக் கணக்குப் புத்தகத்துடன் (அ.சா.ஆ.2) சுற்றி வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.5,000/–த்தை மீட்க உதவியுள்ளார். கம்லா என்று சித்திரத் தையல் வேலை செய்து அலங்கரிக்கப்பட்டுள்ள சிகப்புத் துணியானது புகார்தாரரின் மனைவிக்குச் சொந்தமானது என்றும், அந்த வங்கிக் கணக்குப் புத்தகம் புகார்தாரருக்கு சொந்தமானது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதேபோன்று குற்றச் சம்பவத்தின்பொழுது

பயன்படுத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ள உடன் குற்றவாளியான மன்ஜித் என்பவருக்கு சொந்தமான நாட்டுத் துப்பாக்கி ஒன்றும், சிறிய தொகையும் உடன் குற்றவாளிகள் கொடுத்த வெளிப்படுத்துதல் அறிக்கை மூலம் மீட்கப்பட்டுள்ளன. இந்த குற்றச்சாட்டு வாக்குமூலமானது மேல்முறையீட்டாளரின் வெளிப்படுத்துதலுடன் ஒத்துப் போகின்றன.

5. விசாரணையின்போது அரசுத்தரப்பு சாட்சிகளில் பலர் அரசுத்தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளனர். புகார்தாரர் (அ.சா.4) அவரது வாக்குமூலத்தில் "சிவப்புத் துணி" அவரது மனைவிக்கு சொந்தமானது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அவர் முன்னிலையில் மேல்முறையீட்டாளரின் உடைமையிலிருந்து வங்கி கணக்கு புத்தகம் மற்றும் / அல்லது கூறப்பட்ட துணி மீட்கப்பட்டது என்பதை அவர் மறுத்துள்ளார். மேல்முறையீடு செய்தவர் உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை செய்த நபர்களின் அடையாளத்துடன் பொருந்தவில்லை என்று அவர் மேலும் மறுத்துள்ளார். கைப்பற்றுதல் குறிப்பாணையில் (அ.சா.ஆ.12) புகார்தாரரின் கையொப்பம் இருந்ததையும் மறுத்துள்ளார். புகார்தாரரின் உடன் பிறந்தவரின் மகன் சஞ்சய் (அ.சா.6) அந்த சம்பவத்தினை நேரில் கண்ணுற்ற சாட்சியாக இருந்தும், சம்பவத்தின் நிகழ்வை நிராகரித்ததோடு புகார்தாரரிடமிருந்து பணம் எதுவும் பறிக்கப்படவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். அதே மாதிரியான முறையில் காவல்துறையினரால் பொருட்களை மீட்கும்போது உடன் இருந்த தனிப்பட்ட சாட்சிகளான அ.சா.5, அ.சா.8 ஆகியோர் அரசுத்தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ்சாட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

6. சம்பிரதாயமான சாட்சிகள் மட்டுமே அரசுத்தரப்பு வழக்கை ஆதரித்துள்ளதோடு குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றத்தை நிலைநிறுத்தியுள்ளார்கள். இதுதொடர்பாக வழக்கின் புலன் விசாரணையின் பொறுப்பு அலுவலரான காவல் உதவி சார்பு ஆய்வாளர் ராஜிந்தர்குமார் (அ.சா.14) அளித்த சாட்சியம் சற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த சாட்சி மேல்முறையீட்டாளர் உட்பட அனைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் முன் வந்து கொடுத்த வெளிப்படுத்துதல் அறிக்கைகளின் சட்டப்படியான தன்மையை உறுதிப்படுத்தியதுடன் காவல்துறையினர் முன் புகார்தாரர் அளித்த கூடுதல் வாக்குமூலத்தில் ரூ.46,000/–த்தை இந்தியன் வங்கியின் வங்கிக் கணக்கு புத்தகத்துடன் புகார்தாரரின் மனைவியின் பெயர் சித்திர தையல் வேலை செய்யப்பட்ட சிவப்புத் துணியில் சுற்றப்பட்டிருந்தது என்று கூறியுள்ளார். இருந்தபோதிலும் காவல் உதவி சார்பு ஆய்வாளர் ராஜிந்தர்குமார் தனது குறுக்கு விசாரணையில் மேல்முறையீட்டாளரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்ட சிவப்புத் துணி வெளிச் சந்தையில் எளிதாக கிடைக்கக் கூடியது என்றும், மேலும் கம்லா என்ற பெயரையும் அந்த துணியின்மீது எளிதில் பொறிக்க முடியும் என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், தனது சாட்சியத்தில் சக குற்றஞ்சாட்டப்பட்டவரான மஞ்சித் என்பவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது புகார்தாரர் அதில் பங்கேற்க மறுத்து அதற்கு பதிலாக மஞ்சித்தை அடையாளம் காட்டினால் மஞ்சித் புகார்தாரரை கொன்றுவிடுவார் என்று கூறி ஒரு பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். தலைமைக் காவலர் கர்ம்பீர் சிங் (அ.சா.13) என்பவர் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் வாக்குமூலம் அளித்தபொழுதும், அதனடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட பொருட்கள்

கைப்பற்றப்பட்டபொழுதும் அ.சா.14 யுடன் இருந்தது குறித்தும் தனது சாட்சியத்தில் கூறி அரசுத்தரப்பு கூற்றை ஆதரித்துள்ளார்.

7. மேல்முறையீட்டாளரை குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 313–ன் கீழ் வினவியபோது அவருக்கு பாதகமான மீட்பு ஆதார சாட்சியங்கள் அனைத்தையும் மறுத்துள்ளார். அதேபோன்று உடன் இருந்த எதிரிகளும் அரசுத்தரப்பில் கூறப்பட்டவைகளை முழுமையாக மறுத்துள்ளார்கள்.

8. விசாரணை நீதிமன்றம் அரசுத்தரப்பு முக்கிய சாட்சிகளின் சாட்சியத்தில் சிறிய முரண்பாடுகள் இருந்தாலும் முக்கிய சாட்சிகள் அரசுத்தரப்பு வழக்கை நிரூபித்துள்ளனர் என்ற அரசுத்தரப்பு வாதத்தில் விசாரணை நீதிமன்றம் வலிமையை கண்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் ஒப்புக்கொண்டு கொடுக்கும் வாக்குமூலம் எந்த சங்கதியையும் கண்டறிய அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படலாம் என்று நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டுள்ளது. அரசுத்தரப்பு முக்கிய சாட்சிகள் சிறுசிறு முரண்பாடுகளுடன் அரசுத்தரப்பு வழக்கை போதுமான அளவில் நிரூபித்துள்ளதாக அரசுத்தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதத்தில் வலிமையுள்ளதாக விசாரணை நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஒப்புதலானது ஏதாவது ஒரு சங்கதியை கண்டறிவதாக இருக்கும்பொழுது அதனை அந்த குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பயன்படுத்தலாம் மற்றும் இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் வசத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறிப்பாக சிகப்புத் துணி மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகம்

ஆகியவைகள் அவரின் வசத்திற்கு எப்படி வந்தன என்பது குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் எவ்வித விளக்கமும் அளிக்கத் தவறியுள்ளார் என்று விசாரணை நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களானது குற்றத்தை அனுமானிக்கப் போதுமானது என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்து குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றத்திற்குள் கொண்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் மற்றும் மஞ்சித் ஆகியோரை இ.த.ச. பிரிவுகள் 392 மற்றும் 397 ன் கீழ் தண்டித்துள்ளது. மேலும் மஞ்சித் என்பவரை ஆயுதச்சட்டம் பிரிவு 25–ன் கீழும் தண்டித்துள்ளது. சக குற்றஞ்சாட்டப்பட்டவர்களான முகேஷ் மற்றும் சுபாஷ் ஆகியோரை இ.த.ச பிரிவு 120B–ன் கீழ் தண்டித்துள்ளது. அனைத்து எதிரிகளுக்கும் அதிகபட்ச தண்டணையாக பத்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டணை விதித்து இ.த.ச. பிரிவு 397 மற்றும் / அல்லது இ.த.ச. பிரிவு 120B–ன் கீழ் தண்டணை விதிக்கப்பட்டுள்ளது.

9. அதிருப்தியடைந்த எதிரிகள் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தில் தனித்தனியாக மேல்முறையீடுகள் தாக்கல் செய்துள்ளார்கள். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அல்லது தனிப்பட்ட சாட்சிகள் யாரும் அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காத நிலையில் வெளிப்படுத்துதல் அறிக்கைகளின் அடிப்படையில் மட்டும் அவர்களை தண்டிக்க இயலாது என்பதுதான் அவர்களின் உண்மையான வாதமாகும். சாட்சியத்தை மறுமதிப்பீடு செய்த உயர்நீதிமன்றம் எதிரி தரப்பில் எழுப்பப்பட்ட வாதத்தில் திருப்தியடையவில்லை மற்றும் விசாரணை

நீதிமன்றத்தின் முடிவை ஒத்துக் கொண்டுள்ளது. மேலும் கூட்டுக்கொள்ளையில் அளவிட இயலாத நிகழ்வுகள் எழும்பொழுது மற்ற சாட்சியங்கள் குற்றம் செய்ததற்குரியதை நோக்கி அமைந்திருக்கும்பொழுது நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டவில்லை என்பது முக்கிய பரிசீலனையாக உய்த்துணர இயலாது என்று குறிப்பிட்டுள்ளது. எதிரிகளுக்கு வழங்கப்பட்ட தண்டணையை உயர்நீதிமன்றம் பொது தீர்ப்புரை மூலம் ஊர்ஜிதம் செய்துள்ளது. ஆயினும்கூட உயர்நீதிமன்றம் நீதியின் நலனை அடையும் வகையில் இ.த.ச. பிரிவு 397–ன் கீழான தண்டணையை ஏழு ஆண்டுகளாகக் குறைத்துள்ளது.

10. பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் தற்பொழுது இந்த நீதிமன்றத்தின் முன்பு.

<u>வாதங்கள்:</u>

11. நாங்கள் மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தையும், எதிர்மனுதாரர் அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தையும் கணிசமான அளவில் கேட்டு பதிலேடுகளை ஆழமாக பரிசீலனை செய்துள்ளோம். மேல்முறையீட்டாளர் தரப்பில் எழுப்பப்பட்டுள்ள முதன்மையான வாதம் என்னவென்றால் வெளிப்படுத்துதல் அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே அவருக்கு தண்டணை வழங்கப்பட்டுள்ளது மற்றும் அவர் மீதான இ.த.ச பிரிவுகள் 392 மற்றும் 397–ன் கீழான தண்டணையை தாங்கும் வகையில் வேறு எவ்வித முரண்பாடில்லாத சாட்சியங்களும் இல்லை. மேலும் இந்த மேல்முறையீடு நிலுவையில்

உள்ளபொழுது சக எதிரிகளான முகேஷ் மற்றும் சுரேஷ் ஆகியோர் மீதான இ.த.ச. பிரிவு 120B–ன் கீழான தண்டணையை ஏற்க போதுமான சாட்சியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றம் குற்றவியல் மேல்முறையீடு எண்.1375/2010 மற்றும் குற்றவியல் மேல்முறையீடு எண்.1328/2013 ஆகிய வழக்குகளில் ஏற்கனவே விடுதலை செய்துள்ளது.

12. மறுபுறம் அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஒத்த தீர்ப்பு கொண்ட வழக்குச் சங்கதிகளில் இந்நீதிமன்றம் குறுக்கிடுவதற்கு வரையறுக்கப்பட்ட வாய்ப்புகளே உள்ளன என்பதை எங்களுக்கு நினைவூட்டினார் மற்றும் மேல்முறையீட்டாளரின் தண்டணையானது அவரது வெளிப்படுத்துதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், அந்த வெளிப்படுத்துதல் வாக்குமூலமானது ரூ.5,000/– பணத்துடன் சிகப்பு துணி மற்றம் இந்தியன் வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு வழிகாட்டியுள்ளதால் மேல்முறையீட்டாளரின் தண்டணைக்கு போதுமான ஆதரவாக உள்ளன. சக எதிரிகளின் விடுதலையானது அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றமுறு சதி என்பது நிரூபிக்கப்படவில்லை என்ற அளவில் மட்டுமே நிராகரிக்கப்பட்டுள்ளன மற்றும் ஆகையால் அவர்களின் விடுதலையானது அடாத காரியம் புரிந்துள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள மேல்முறையீட்டாளரின் தண்டணையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

<u>ஆய்வு:</u>

13. அரசமைப்புச் சட்டத்தின் 136 ஆவது பிரிவின்படி இந்நீதிமன்றத்திற்கு அபரிமிதமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், சிறப்பு அனுமதி

மூலம் குற்றவியல் மேல்முறையீட்டில் அத்தகைய அதிகாரங்களைக் கோரும் அதே வேளையில், இந்த நீதிமன்றம் சாட்சிகளின் மறுமதிப்பீட்டில் ஈடுபடுவதைத் தவிர்த்து, உண்மை கண்டறியப்படும்போது சாட்சிகளின் நம்பகத்தன்மையை சந்தேகிக்கும் என்பதை முதலிலேயே வலியுறுத்தலாம். சவாலின் கீழ் எடுக்கப்பட்ட முடிவு (கள்) சட்டம் அல்லது நடைமுறையின் வெளிப்படையான பிழையைச் செய்ததாகக் காட்டப்படும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர, அல்லது எட்டப்பட்ட முடிவு முன்னாள் தோற்ற விபரீதமாக இருக்கும்.

14. இவ்வழக்கில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் சந்தேகப்பட முடியாத சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான புகார்தாரர் (அ.சா.4) மற்றும் அவரது உடன் பிறந்தவர் மகன் (அ.சா.6) ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்கவில்லை. புகார்தாரர் (அ.சா.4) நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தில் மேல்முறையீட்டாளர் அல்லது அவரது சக எதிரிகள் குற்றச் சம்பவத்தின் நிறைவேற்றத்தில் ஈடுபடவில்லை என்று சந்தேகத்திற்கு இடமளிக்காமல் மறுத்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளரைப் பொறுத்த வரையில் அடையாள அணி வகுப்பு நடத்த முயன்றதாக புலன் விசாரணை அலுவலரான காவல் உதவி சார்பு ஆய்வாளர் ராஜிந்தர் குமார் (அ.சா.14)–ன் சாட்சியத்தில் குறிப்பிடவில்லை. குறிப்பாக இவ்வழக்கில் அனைத்து எதிரிகளும் ரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் மூலமானது உண்மையிலேயே அறியப்படவில்லை என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது தீச்செயல் புரிந்தவர்களில் மேல்முறையீட்டாளரும் ஒருவர் என்று அடையாளம் கண்டுள்ளது தெளிவில்லாததாக உள்ளது.

15. உறுதிப்படுத்துகின்ற சாட்சியம் எதுவும் இல்லாமல் வெளிப்படுத்துதல் அறிக்கை (Ex.PD) யில் கூறப்பட்டுள்ள விவரம் மற்றும் கைப்பற்றுதல் குறிப்பாணை (அ.சா.ஆ.2)ன் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டணையை உறுதி செய்ய முடியுமா என்பதே நமது பரிசீலனைக்கு எழும் சுருக்கமான கேள்வி ஆகும்.

16. இந்த விஷயத்தில் உறுதியான தீர்ப்பை வழங்க நாங்கள் முயல்கிறோம். ஒரு எதிரியின் வெளிப்படுத்துதல் அறிக்கை மற்றும் அதன் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டப்பட்ட பொருட்களை கைப்பற்றியதன் அடிப்படையில் நீதிமன்றம் எதிரிக்கு தண்டணை வழங்கலாம். ஆயினும் அந்த எதிரி குற்றவாளி என்பதை உறுதி செய்ய கைப்பற்றுதலானது மறுக்க முடியாததாகவும், மற்றும் சந்தேகத்தால் மறைக்கப்படாமலும் இருக்க வேண்டும். நாங்கள் அத்தகைய சூழ்நிலைகள் என்று பின்வருவனவற்றை சேர்க்கிறோம். (i). அடாத காரியம் செய்த தேதிக்கும், வெளிப்படுத்துதல் நடைபெற்ற தேதிக்கும் இடையிலான காலகட்டம் (ii) கைப்பற்றப்பட்ட பொருளின் பொதுத் தன்மை மற்றும் சந்தையில் அதன் கிடைக்கும் தன்மை (iii) பொருளின் தன்மை மற்றும் குற்றத்துடன் அதன் தொடர்பு (iv) அந்தப் பொருளை மாற்றக் கூடிய தன்மை (v) சான்றொப்பமிட்ட சாட்சிகள் நீதிமன்றத்தின் முன் அளித்துள்ள சாட்சியம் மற்றும் அதன் நம்பகத்தன்மை மற்றும்/அல்லது இதர சங்கதிகளை வைத்து கைப்பற்றுதலின் உண்மைத் தன்மையையும், சாட்சிய மதிப்பையும் பரிசீலிக்க வேண்டும்.

(துளசிராம் கானு –எதிர்– மாநில அரசு[2]

பாஞ்சோ –எதிர்– ஹரியானா மாநில அரசு[3]

ராஜஸ்தான் மாநில அரசு –எதிர்– தளிவர் மற்றும் ஒருவர்[4]

பரம பரஸ்ராம் குதச்சார் –எதிர்– கர்நாடக மாநில அரசு[5])

17. மறுக்க முடியாத அளவிற்கு நம்பிக்கையை தூண்டும் மற்றும் / அல்லது மீட்பின் உள்ளடக்கமானது கூறப்படும் குற்றத்துடன் தொடர்புடையது என்பதை அரசுத்தரப்பு நிரூபிக்க தவறும்பொழுது சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்க நீதிமன்றம் முயற்சி செய்ய வேண்டும். அது "ஒரு அப்பாவியை தண்டிப்பதைவிட பத்து குற்றவாளிகள் தப்பிப்பது மேலானது" என்ற சுமார் மூன்று நூற்றாண்டு கால குற்றவியல் சட்டவிதியின் அடிப்படைக் கோட்பாடாகும். வலுவான சந்தேகத்திற்கு ஆதாரம் இருந்தபோதிலும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கும் கோட்பாடானது "ஒரு குற்றவாளியை விடுதலை செய்வது எவ்வாறு தவறான நீதியோ அதுபோலவே ஒரு அப்பாவியைத் தண்டிப்பது ஆகும்."

18. அளவுக்கு அதிகமான கொடுங்குற்றங்கள் நடக்கின்றன மற்றும் பாதிக்கப்பட்டவர் பயம் அல்லது மற்ற புறம்பான காரணங்களினால் உண்மையை சொல்ல விரும்பவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே ஒரு நபரை தண்டிப்பது அறிவு அல்லது விவேகம் ஆகாது. எதிரி தனது குற்றமின்மையை நிரூபிக்க வேண்டும் என்ற சட்டப்படியான கடமை இல்லாத நிலையிலும் குற்றமின்மையை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யும் பொறுப்பை சந்தேக நபர் மீது மாற்ற இயலாது. முக்கிய சாட்சிகள் வழுவிச் செல்லும் நிலையில் அந்த

சாட்சிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியது அரசுத் தரப்பின் முக்கிய பொறுப்பாகும் அல்லது வாய்மொழி சாட்சியத்தை மட்டும் முழுமையாக சார்ந்திரான வழக்குகளில் வேறு முரண்பாடில்லாத சாட்சியங்களை சேகரிக்க வேண்டும்.

19. இவ்வழக்கில் அரசுத்தரப்பானது மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று பொருந்துமாறு கொண்டு வருவதற்கு பரிதாபமாக தோல்வியடைந்து உள்ளது என்று நாங்கள் முடிவு செய்கிறோம். இந்த பழைய அளவுகோல்களை கவனத்தில் கொள்ளாமல் கீழ் நீதிமன்றங்கள் பொருத்தமற்ற முடிவுகளால் அறியாமல் சாய்ந்துள்ளன. கூட்டுக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன என்பதால் விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அவசரப்பட்டு மேல்முறையீட்டாளரிடம் குற்றச்சாட்டுக்குள்ளான பொருட்கள் எப்படி வந்தன என்பதை மேல்முறையீட்டாளர் நிரூபிக்கவில்லை என்று கைப்பற்றுதலின் நம்பகத்தன்மையை பரிசீலிக்காமல் கூறியுள்ளன. பின்வரும் காரணங்களினால் நாங்கள் அவ்வாறு கூறுகிறோம்.

முதலாவதாக, உள்ளூர் சாட்சிகள் முன்னிலையில் மேல்முறையீட்டாளரின் வீட்டை சோதனையிட காவல் துறையினர் கணிசமான முயற்சி எடுக்கவில்லை என்று உதவி சார்பு ஆய்வாளர் ராஜிந்தர் குமார் (அ.சா.14) அளித்துள்ள சாட்சியத்தை உயர்நீதிமன்றமும், விசாரணை நீதிமன்றமும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள தவறியுள்ளன. கைப்பற்றுதல் நிகழ்வின் ஒரேயொரு சாட்சியான ராஸ்து (அ.சா.8) என்பவர் ஒப்புக்கொண்டபடி புகார்தாரரின் தோழன் ஆவார்.

இரண்டாவதாக, புகார்தாரரும் (அ.சா.4), அத்துடன் ரால்து (அ.சா.8) என்பவரும் மேல்முறையீட்டாளரின் வெளிப்படுத்துதல் அறிக்கையில் கூறியுள்ளபடி வங்கி கணக்குப் புத்தகம் அல்லது சிகப்புத்துணி மேல்முறையீட்டாளரின் வசத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை.

மூன்றவாதாக, கைப்பற்றுதல் குறிப்பாணையில் புகார்தாரரின் (அ.சா.4) கையொப்பத்தை மறுத்துள்ளபொழுதும், மறுபுறம் ரால்து (அ.சா.8) அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த ஆவணங்கள் கைப்பற்றுதல் குறிப்பாணையில் (அ.சா.ஆ.2) விளக்கப்பட்டிருந்ததாகவோ அல்லது அவரது மேலோப்பத்தை உறுதிப்படுத்தியதாகவோ கூறவில்லை.

நான்காவதாக, புலன் விசாரணை அலுவலரான ராஜிந்தர் குமார் (அ.சா.14) ஒத்துக்கொண்டுள்ளதுபோன்று கைப்பற்றப்பட்ட பொருட்களானது பொது இடங்களில் உள்ள பொருட்கள், பணம் போன்றவை எளிதில் ஒருவரிடமிருந்து மற்றொவருவருக்கு மாற்ற முடியும் மற்றும் கம்லா என்ற சித்திரத்துடன் கூடிய சிகப்புத் துணி சந்தைகளில் எளிதில் கிடைக்கக்கூடியது.

ஐந்தாவதாக, கைப்பற்றுதலானது சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியிலிருந்து சுமார் ஒரு மாதத்திற்கு பின்னர் நடந்துள்ளது. மேல்முறையீட்டளார் புகார்தாரரிடம் இருந்து கொள்ளையடித்த பணம், சிகப்புத்துணி மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தை முழுக் காலக்கட்டத்திலும் வைத்திருந்தார் என்பதை எங்களால் நம்ப முடியவில்லை.

ஆறாவதாக மற்றும் இறுதியாக, பதிவுகளில் மேல்முறையீட்டாளரின் அக்கிரமச் செயல் குறித்து மற்ற சாட்சிகள் யாரும் குறிப்பிடவில்லை.

20. அரசுத்தரப்பானது மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நிரூபிக்க பரிதாபகரமாக தவறியுள்ளபொழுதும் விசாரணை நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதிர்மறை அனுமானம் கொண்டுள்ளன என்று எங்களுக்கு தோன்றுகிறது. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் பார்வையில் கூறப்படும் அச்சுறுத்தலை பொறுத்தவரை அத்தகைய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்கு எந்த ஆதாரமும் இல்லாத நிலையில் அத்தகைய குற்றச்சாட்டுக்களில் நம்பகத் தன்மையை வழங்குவது கடினமாக உள்ளது. சக எதிரி மஞ்சித் என்பவருக்கு நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின்போது புகார்தாரர் கொடுத்த சத்தியப் பிரமாண வாக்குமூலத்தை சுட்டிக்காட்ட அரசுத்தரப்பு முயன்றுள்ளது. அந்த சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில் மஞ்ஜித் என்பவரின் பெயர் மட்டுமே உள்ளது என்பதையும், மேல்முறையீட்டாளரின் பெயர் இல்லை என்பதையும் நாங்கள் காண்கிறேம்.

21. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் பதிவில் உள்ள சாட்சியங்கள் மேல்முறையீட்டாளர் மீதான குற்றத்தை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கவில்லை மற்றும் கீழ் நீதிமன்றங்கள் மேல்முறையீட்டாளரின் தண்டணையை நியாயப்படுத்த எவ்வித முரண்பாடில்லாத அடிப்படைக் காரணமும் இன்றி மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று குறிப்பிட்டுள்ளன என்று நாங்கள் முடிவு செய்கிறோம்.

முடிவு:

22. முடிவாக, இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் பிறப்பித்துள்ள தீர்ப்புரைகள் மற்றும் உத்தரவுகளானது ரத்து செய்யப்பட்டு அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் மேல்முறையீட்டாளர் விடுதலை செய்யப்படுகிறார். பிணைப்பத்திரம் எதுவும் இருந்தால் விடுவிப்பு செய்யப்படுகிறது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."